**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. 236/2024

பெயர் : லெட்சுமி காந்தன் ( PW1) (Cross )

த/க/பெ. :

தேதி : 26.03.2026

ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது சொந்த ஊர் சீர்காழி தாலுக்கா பனங்காட்டான்குடி. பிரதிவாதி மயிலாடுதுறை தாலுக்கா சோழியங்கோட்டகம் என்றால் சரிதான். பிரதிவாதி எனக்கு உறவுக்காரர் என்றால் இல்லை. பிரதிவாதி எங்கள் ஊரோ எங்கள் தாலுக்காவோ இல்லை என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் தான் இருக்கிறார். எனக்கும் பிரதிவாதிக்கும் வேறு வரவு செலவு உண்டா என்றால் இதற்கு முன்பு பணம் கொடுதது வாங்கி உள்ளேன். எந்த வருடத்தில் பணம் கொடுத்து எப்போது திரும்ப பெற்றேன் என்பதை குறிப்பிட்டு சொல்ல இயலாது. பொதுவாக கடன் கொடுக்கும் போது பத்திரத்தில் கையெழுத்து பெற்றுக் கொள்வது என் வழக்கம் என்றால் சரிதான். இதற்கு முன்பு கடன் பத்திரம் எதுவும் பிரதிவாதி எழுதிக் கொடுக்கவில்லை. பிரதிவாதியின் கணவர் ராமலிங்கம் தற்போதது நீதிமன்றம் ஆஜராகி உள்ளார். அவருக்கும் எனக்கும் நேரடியாக எந்த வரவு செலவும் இல்லை என்றால் பிரதிவாதி அவர் கணவரை அழைத்து வந்து தான் பணம் வாங்கி சென்றார். வா.சா.ஆ. 1 தான் பிரதிவாதி எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். எனக்கும் பிரதிவாதிக்கும் அவர் கணவருக்கும் வேறு வகையில் வரவு செலவு உண்டு என்று வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. ராமலிங்கம் என்னிடம் பத்திரம் எழுதிக் கொடுத்து கணக்கு முடித்துள்ளார் என்றால் சரியல்ல. என் மனைவி பெயர் தில்லைவள்ளி. நான் பணம் கொடுக்கும் போது என் மனைவியிடம் தெரியபடுத்துவேன். ராமலிங்கம் என் மனைவியிடம் பத்திரம் எழுதிக்கொடுத்து கடன் பெற்ற ஆவணம் தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் 11.08.2021 ம் தேதியிட்ட பிராமிசரி கடன் பத்திரம் என்றால் சரிதான். அந்த தொகையை கொடுத்து முடித்துவிட்டு இருப்பார் **அது பி.வா.சா.ஆ. 1** ஆக குறியிடுசெய்யப்படுகிறது. அந்த தொகையை கொடுத்து முடித்துவிட்டாரா என்றால் அந்த தொகையை திருப்பி கொடுத்துவிட்டு தான் தாவா தொகையை வாங்கி சென்றார்கள். வா.சா.ஆ. 1ல் முதல் சாட்சி ராமலிங்கம், 2 வது சாட்சி சம்பந்தம். வேறு யாரேனும் அந்த ஆவணத்தில்

கையெழுத்து போட்டுள்ளாரா என்றால் சிவராமன் என்பவரும் அதில் கையெழுத்து போட்டுள்ளார். பி.வா.வாச.ஆ. 1ல் சாட்சி கையெழுத்து போட்டுள்ளது யார் என்றால் சிவராமன் மட்டும் தான் நினைவில் உள்ளது. அதில் ராமலிங்கம் மனைவியிடம் சாட்சி கையெழுத்து வாங்கி உள்ளோமா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ. 1ல் சிவராமன் 2 வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார். அதில் முதல் சாட்சியாக யாரும் கையெழுத்து போடவில்லை. அதில் வழக்கிற்காக பிரதிவாதி வனிதா கையெழுத்து போட்டுள்ளார். வா.சா.ஆ. 1ல் பிரதிவாதியின் கையெழுத்து தமிழில் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 1ல் பிதிவாதியின் சாட்சி கையெழுத்து ஆங்கிலத்தில் உள்ளது என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிரதிவாதி பணம் வாங்க வில்லை என்று பதில் அறிவிப்பு கொடுத்துள்ளர். அதில் உள்ளது கையொப்பம் தன்னுடையது அல்ல என்று மறுத்துள்ளார் என்றால் அது பொய்யனாது. அது குறித்து நான் காவல் துறையில் வழக்கிற்கு முன்பு புகார் கொத்துள்ளேனா என்றால் சிவில் சம்பந்தமானது என்பதால் வழக்கு போட்டுள்ளேன். வா.சா.ஆ. 1 ல் 2 தாள்கள் உள்ளது. அதை பிரதிவாதி தான் வாங்கினார். யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் என் பெயரில் பத்திரம் வாங்க பட்டது. அந்த கடன் பத்திரத்தில் தட்டச்சு செய்தது யார் என்பது குறிப்பிடப்படவில்லை. 20.01.2022 ம் தேதி எழுதிக் கொடுத்தார்கள். அவர்கள் தான் தட்டச்சு செய்து எடுத்து வந்தார்கள். எனது சொந்த ஊர் நெய்வேலி அருகே முத்துக்கிருஷ்ணாபுரம். ராமலிங்கம் தாயார் வகையில் உறவு முறை என்றால் சரியல்ல. வழக்கிற்கு பின்னர் தான் அவர்கள் உறவு முறை என்பதை தெரிதந்துக் ொகண்டேேன். ஆனால் நெருங்கிய உறவு இல்லை. 2021 ல் 5 லட்சம் ரூபாய் பிரதிரவாதியின் கணவருக்கு என் மனைவி மூலமாக கடன் கொடுத்தேன் என்றாலும் அதற்கு நான் வருமான வரி செலுத்தினேனா என்றால் நான் இடத்தை விற்பனை செய்து வைத்திருந்த தொகை. 2022 ல் 6 லட்சம் கொடுத்தற்கு வருமான வரி செலுத்தி உள்ளேனா என்றால் இல்லை. பிள்ளைகள் படிப்பிற்காக வைத்திருந்த தொகை. ஒரு வடத்திற்கு 6 லட்சம் வருவதற்கான என்ன தொழில் என்றால் நிலம் விற்று பிள்ளைகள் படிப்பிற்காக வைத்திருந்த தொகை. 2019 ல் ராமலிங்கத்திற்கு 50 ஆயிரம் கொடுத்தேன் என்றால் நினைவில்லை. ராமலிங்கம் என்னிடம் என்ன காரணத்திற்காக பணம் வாங்கினார் என்பதை வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ 3 பணம் அறிவிப்பு மூலமாக பணம் வாங்க வில்லை மற்றும் புரோ நோட்டில் உள்ள

கையெழுத்தை மறுத்துள்ளதாடல பொருளாதார குற்ற பிரிவில் புகார் கொடுத்துள்ளோன என்றால் இல்லை. நான் வீடு கட்டும் போது ராமலிங்கம் எனக்கு செங்கல் எடுத்து கொடுத்ததார என்றால் எல்லோருக்கும் கொடுப்பததைபோல் தான் கொடுத்தார். சுமராராக 6 ஆயீரம் கல் கொடுத்தார் என்றால் சரியல்ல. ஆயீரம் கல் 11 ஆயிரம் என்றால் சரியல்ல. ரூபாய் 8,500/- என்று சிவராமன் என்பவரிடம் வாங்கினேன். பி.வா.சாஆ.1ல் ஆங்கிலத்திலும் வா.சா.ஆ.1ல் தமிழிலும் கையெழுத்து போட்டுள்ளார் பதில் அறிவிப்பிற்கு பின்னர் பிரதிவாதி கையெழுத்து போட்டுள்ளதாக பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை. எனக்கும் பிதிவாதிக்கும் இடைடேயே நேரடியாக கடன் போக்குவரத்து எதுவும் இல்லை என்றால் பணத்தை வாங்கி கொண்டு பொய் சொல்கிறார்கள். எனக்கும் பிரதிவாதி கணவருக்கும் கடன் பிரச்சனை இருந்து அதை 2021ல் லேயே முடித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் வெற்று பத்திரம் வாங்கி ஆங்கிலத்தில் பிரதிவாதி கையெத்தை நானாகவே ஆங்கிலத்தில போட்டு புரோ நோட் தயார் செய்து வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.